**மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக் குழு**
**தொழிற்சார் அறிவை மதிப்பிடும் பரீட்சை – ஜனவரி 2020**
**முன் பள்ளி ஆசிரியர்**
**தேசிய தொழிற் தகைமை – மட்டம் 4**

**நேரம் - 03 மணித்தியாலங்கள்**

**பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்**

- இந்த வினாத்தாள் 1 மற்றும் 2 என்றவாறான இரு பாகங்களைக் கொண்டது.
- இவ்வினாத்தாளில் பல்தேர்வு வினாக்களும் குறுகிய விடைகளைக் கொண்ட வினாக்களும் உள்ள டங்கியுள்ளன.
- பாகம் 1 இல் உள்ள எல்லா வினாக்களுக்கும் தரப்பட்டுள்ள நான்கு விடைகளுள் மிகப் பொருத்த மான விடையைத் தெரிவு செய்து தரப்பட்டுள்ள விடையெழுதுந்தாளில் அதற்கு உரிய இலக்கத் துக்குரிய கூட்டில் (X) அடையாளத்தை இடவும்.
- இந்த வினாத்தாள் 08 gக்கங்களைக் கொண்டது
- முதலாம் வினாத்தாளின் அனைத்து வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்
- பாகம் 2 இல் உள்ள முதலாம் வினா உள்ளடங்கலாக ஆறு வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்

---

## பகுதி 1

1. அன்றாடச் செயற்பாடுகளுக்காக செலவழிந்த சக்தியை மீளவும் பெற்றுக் கொள்வதற்கும் அதனைப் புதுப்பித்துக்கொள்ளவும் உதவுவது
   a. புரதம்
   b. காபோவைதரேற்று
   c. விட்டமின் C
   d. கனிய உப்பு

2. முன் பள்ளிக் கல்வியின் குறிக்கோள்
   a. ஆரம்பக் கல்விக்காக பிள்ளையை ஆயத்தஞ் செய்தல்
   b. பிள்ளை சுற்றாடலை விளங்கிக் கொள்ள உதவுதல்
   c. பிழையின்றி எழுத்துக்களை எழுத பிள்ளையைப் பயிற்றுவித்தல்
   d. பிள்ளையின் சமூகத் தேர்ச்சியை விருத்தி செய்தல்

3. பிள்ளையினுள் வெற்றிகரமான மனப்பாங்கு விருத்திக்கு அவசியமான அடிப்படை அங்கங்களாக அமைபவை
   a. முன் அனுபவம், உளஞ்சார் பின்னணி, ஆர்வம், விருப்பம், விளங்கிக் கொள்ளும் ஆற்றல்
   b. உளஞ்சார் பின்னணி, ஆர்வம், விருப்பம், எழுதும் ஆற்றல், முன் அனுபவம்
   c. விளங்கிக் கொள்ளும் ஆற்றல், முன் அனுபவம், உளஞ்சார் பின்னணி, ஆர்வம், விருப்பம்
   d. ஆர்வம், முன் அனுபவம், சமூகப் பின்னணி, விருப்பம், விளங்கிக் கொள்ளும் ஆற்றல்

4. பிள்ளையின் ஆரம்ப ஐந்து ஆண்டுகள் அதன் மூளை விருத்தியின் தீர்க்கமான பருவமாக அமைவது,

   i. இக்காலப் பருவம் வெளிப்புற தாக்கங்களுக்கு அதிகமாக உட்படும் காலமாக அமைவதால், அது பிள்ளையின் எதிர்கால வாழ்வின் அறிவு சார்ந்த, சமூகச் செயற்பாடுகளின் தரத்தை நிச்சயிக்கும் காலமாக அமைவதாலாகும்.
   ii. மொழித் தேர்ச்சியைப் பெற்றுக் கொள்ளுதல் இக்காலத்துக்குள் பிள்ளை அடையும் பல்வேறு அனுபவங்களின் ஊடாக அதனுள் சமூகமயமாக்கம் நிகழ்வதினாலாகும்
   iii. பாடசாலைக்குள் மட்டுமன்றி பிள்ளையின் எதிர்கால வாழ்க்கையின் சுகதார, வளர்ச்சி, விருத்தி மற்றும் கற்றலின் செயலாற்றலை அமைத்துக் கொள்வதற்கான அடிப்படை யாக அமையும் காலமாகும்.
   iv. இக்காலத்துக்குள் பிள்ளையின் வாழ்க்கையின், வேறெந்த காலத்தையும் விட அதிக மாகவும் துரிதமாகவும் அதன் மூளை விருத்தியடையும். பிள்ளை விரைவாகவே பெற்றுக் கொள்ளும் அனுபவம் அதன் கல்விசார் அடிப்படை அமைவதற்கும் உதவி யாகவும் இருக்கும்.

   a. i, ii, iii    b. i, iii, iv    c. i, ii, iv    d. iii,iv,ii

5. கற்றல் அனுபவத்தைப் பெற்றுக் கொள்ள பயன்படுத்தும் முறையியல்,
   a. போசாக்கு, அவதானிப்பு, ஆராய்ச்சி, முயன்று தவறல், பின்பற்றல்
   b. விளையாட்டுச் செயற்பாடு, முதிர்ச்சி, ஆராய்ச்சி, முயன்று தவறல், பின்பற்றல்
   c. விளையாட்டுச் செயற்பாடு, அவதானிப்பு, ஆராய்ச்சி,, முயன்று தவறல், பின்பற்றல்
   d. விளையாட்டுச் செயற்பாடு, அவதானிப்பு, தூண்டல், முயன்று தவறல், பின்பற்றல்

6. “முறையான கல்வியின் இயக்கச் சக்தி விளையாட்டாகும்” எனுங் கருத்தை முன் வைத்த வாறு கல்வியில் விளையாட்டுக்கு உள்ள முக்கியத்துவத்தை எடுத்துரைத்தவர்,
   a. மகாத்மா காந்தி
   b. லோரன்ஸ் ஹோல்பர்க்
   c. ∴பிரெ்ரிச் ∴புரொபல்
   d. பீ. எஸ். ஸ்கின்னர்

7. முன் பள்ளிப் பாடசாலக்கான கட்டிடமொன்றைத் திட்டமிடும் போது அலட்சியப்படுத்தப் பட வேண்டிய விடயம்
   a. நிரந்தரமான தரையும் கூரையும் உறுதியாகக் கட்டியெழுப்பப்பட வேண்டும்.
   b. பிள்ளைகக்கு விளையாடவும் கற்கவும் போதியளவு இடம் இருத்தல் வேண்டும்
   c. மொத்த சுவர்ப் பகுதியில் குறைந்த பட்சம், 1/7 அளவுள்ள பகுதியில் கதவுகளும் யன்னல்களும் இருத்தல் வேண்டும்
   d. பிள்ளைகளின் முழுக் கவனத்தையும் ஆசிரியர் பெற்றுக் கொள்வதற்காக வகுப்பறை முழுமையாக மூடப்பட்டிருத்தல் வேண்டும்

8. செவிப் புலன் குறைபாடுடைய பிள்ளைகளுக்கு வழங்க வேணடிய கற்றல் உபகரணம்,
   a. பெல் ஊடக உபகரணம்
   b. உடல் மொழி உபகரணம்
   c. செவிப் புலன் துணைக் கருவி
   d. முறைசார்ந்த கல்வி

9. சிறந்த உளஞ் சார் மற்றும் சமூகஞ் சார்ந்த சுற்றாடலின் மூலம் பிள்ளைகளுக்கு கிடைப்பது,
   i. ஒழுங்கு மீறப்படும் போது பிள்ளைகளுக்குப் பொருத்தமான மற்றும் ஏற்றவாறாக பெற்றாரிடமிருந்தும் ஆசிரியர்களிடமிருந்தும் தண்டனை பெறுவதற்கு
   ii. எப்போதும் மகிழ்ச்சி, காப்பு, அன்பு மற்றும் அங்கீகாரத்துக்கு பிள்ளை தான் உரித்துடையது என்பதை விளங்கிக் கொள்ள
   iii. பிள்ளைகள் ஒவ்வொருவரினதும் பன்வகையான தேவைகள், விருப்புக்கள் மற்றும் நடத்தைகளை விளங்கிக் கொண்டு அவற்றை மதிப்பதற்கும் அன்பு செலுத்தப்படவும் ஏற்றுக் கொள்ளப்படவும்
   iv. ஒருவரையொருவர் அபிமானத்துடன் விசாரிக்கவும், தமது கருத்துக்களை முன்வைப்பதற்கும் சம வயதுக் குழுவினருடன் கலநைடதுரையாட வாய்ப்பு கிட்டுவதற்கும்

   a. i, ii, iii   b. ii, iii, iv   c. i, ii, iv   d. iii, iv, i

10. முன் பள்ளிப் பிள்ளையொன்றுக்குச் சமூகத்தில் ஒழுங்காக நடந்து கொள்ளும் விதத்தை சொல்லிக் கொடுக்கும் மிகப் பொருத்தமான விதம்
   a. விளையாட்டு வீடொன்றை ஒழுங்கு செய்யலாம்
   b. கதையொன்று சொல்லிக் கொடுக்கலாம்
   c. நடைமுறையான அனுபவமொன்றை பயன்படுத்தலாம்
   d. நாடகமொன்றை நடித்துக் காட்டலாம்

11. மனிதனின் வாழ் நாள் பூராவும் மிகவும் துரிதமாக வளர்ச்சி இடம் பெறும், மிகவும் தீர்க்கமான பருவம் எனக் கருதக் கூடிய காலம்
   a. 02 வயதிலிருந்து 06 வயது வரையான காலம்
   b. 03 வயதிலிருந்து 06 வயது வரையான காலம்
   c. 01 வயதிலிருந்து 06 வயது வரையான காலம்
   d. பிறப்பிலிருந்து 06 வயது வரையான காலம்

12. கையாளுந் திறன் வளர்ச்சி என்பதனால் கருதப் படுவது,
   a. கடதாசித் தாள் ஒன்றின் மீது வரையப்பட்ட கோடுகள் வழியே கத்தரிக்கோலைப் பயன்படுத்தியவாறு வெட்டுவதற்குப் பழக்கப்படுத்துவது
   b. பிள்ளைகளின் புலக்காட்சி உறுப்புக்களை வினைத்திறனுடன் பயன்படுத்துவதற்கு உதவுதலும் அவற்றை கட்டுப்பாட்டுடன் ஒன்றிணைத்தலும்
   c. தசை நார்களின் செயற்பாட்டுக்காக உளவியக்க செயற்பாடுகளிலும் பயிற்சிகளிலும் ஈடுபடுத்தல்
   d. வாசிப்பு, எழுத்து, ஓடுதல், பாய்தல் போன்ற செயற்பாடுகளுக்காக புலக்காட்சி உறுப்புக்களைப் பயிற்றுவித்தல்

13. பிள்ளைக்கு தனது சூழலை விளங்கிக் கொள்ள உதவும் உள்ளார்ந்த வளம்,
   a. ஆராய்ச்சி, நடமாடுதல், புலக் காட்சி, கையாளுந் திறன்
   b. கையாளுந் திறன், ஆராய்ச்சி, வினவுதல், புலக் காட்சி
   c. பரிசோதனை, நடமாடுதல், ஆர்வம், கையாளுந் திறன்
   d. ஆர்வம், நடமாடுதல், கையாளுந் திறன், புலக்காட்சி

14. கணித எண்ணக்கருக்களுள் “தொடர்பு” என்பதன் உப பிரிவுகள்,
   a. பணம், சமமான தன்மை, உரிமை, ஒப்பீடு
   b. வகைகள், சமமான தன்மை, உரிமை, ஒப்பீடு
   c. பெறுமானம், துணைப் பாகம், உரிமை, ஒப்பீடு
   d. உரிமை, துணைப் பாகம், அமைவு, ஒப்பீடு

15. உளவியக்கத் திறன் விருத்தியில் தாக்கஞ் செலுத்தும் காரணிகள்,
    a. உணர்திறன், மனவெழுச்சிக் காப்பு, ஊக்குவிப்பு, புத்திக் கூர்மை
    b. புத்திக் கூர்மை, முதிர்ச்சி, மனவெழுச்சிக் காப்பு, ஒன்றிணைந்த தன்மை
    c. முதிர்ச்சி, மனவெழுச்சிக் காப்பு, ஊக்குவிப்பு, புத்திக் கூர்மை
    d. ஊக்குவிப்பு, முதிர்ச்சி, புலக்காட்சி, புத்திக் கூர்மை

16. வெசக் வைபவம் மற்றும் தைப் பொங்கல் வைபவங்களும் தொடர்புடைய இரு சமயங்கள்,
    a. பௌத்த சமயமும் கிறிஸ்தவ சமயமும்
    b. பௌத்த சமயமும் இந்து சமயமும்
    c. பௌத்த சமயமும் இஸ்லாம் சமயமும்
    d. பௌத்த சமயமும் கத்தோலிக்க சமயமும்

17. முன் பிள்ளைப் பிள்ளைகளுக்கு ஸ்ட்ரோபெறி பழம் ஒன்று வீதம் கொடுத்து அதன் சுவையை அனுபவிக்குமாறு ஆசிரியர் அறிவுறுத்துமாறு அவரால் அவதானிக்க கூடியது,
    a. பிள்ளையின் முகத்தில் உள்ள பாவங்களை நன்கு அறிந்து கொள்ளக் கூடுமாக இருத்தல்
    b. புளிப்புச் சுவைக்கு விருப்பமுள்ள பிள்ளையை இனங்காணக் கூடியதாக இருத்தல்
    c. பிள்ளையின் உணர் திறனை இனங்காணக் கூடியதாக இருத்தல்
    d. பிள்ளையின் துல்லியமான ஆற்றல்களை இனங்காணக் கூடியதாயிருத்தல்

18. "பிள்ளை எழுத்தை இனங் காண்பதற்கும் வாசிப்பதற்கும் முன்னர் கண் இசைவாக்க பயிற்சி யைக் கொடுப்பது இன்றியமையாதது.

    இதற்காக சிபாரிசு செய்யக் கூடிய செயற்பாடு,
    a. பல்வேறு எழுத்துக்களின் சமமான மற்றும் சமமற்ற பண்புகளை இனங்காணல்
    b. புத்தகமொன்றின் பக்கங்களைப் புரட்டுவதை அறிமுகஞ் செய்தலும் புத்தகங்களைக் கவனமாகக் கையாளப் பயிற்றுவிப்பதும்
    c. புத்தகங்களைப் பாவிக்கும் போது கண்களை இடமிருந்து வலமாகக் கையாளப் பயிற்றுவிப்பது
    d. கத்தரிக் கோலைப் பாவித்தவாறு கடதாசித் தாளை வெட்டுவதற்கும் கடதாசித் தாளைக் கிழிப்பதிலும் ஈடுபடுத்துவது

19. அடிப்படையான வடிவங்கள்
    a. முக்கோணமும் பிரமிட்டும்
    b. வட்டமும் கோளமும்
    c. சதுரமும் வட்டமும்
    d. கனக் குறியும் முக்கோணமும்

20. சிறுவர் துஷ்பிரயோகத்தின் அடிப்படையான விதம்,
    a. உடல் ரீதியான, பாலியல் ரீதியான மற்றும் அலட்சியப் படுத்தலின் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாகுதல்
    b. கல்வி ரீதியான, பாலியல் ரீதியான உள ரீதியான மற்றும் அலட்சியப் படுத்தலின் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாகுதல்
    c. சமூக மயமான, உடல் ரீதியான, பாலியல் ரீதியான, உள ரீதியான செயற்பாடுகளின் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாகுதல்
    d. உடல் ரீதியான, பாலியல் ரீதியான, ஆன்மீக ரீதியான அலட்சியப் படுத்தலின் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாகுதல்

21. பாரம்பரிய காப்புக் கொள்கையை (classical conditioning theory) முன்வைத்தவர்
    a. ஐவன் ப.்.ப்லோவ்
    b. ஜீன் பியாஜே
    c. சிக்மண்ட் .்.புரொய்ட்
    d. டேனியல் கோல்ட்மண்

22. விசேட தேவையை உடைய பிள்ளைகள் என்று அறியப்படுவோர்
    a. எப்போதும் மருந்து பாவிக்கும் பிள்ளைகள்
    b. உடல் ரீதியான மற்றும் உள ரீதியான குறைபாடுக் உள்ள பிள்ளைகள்
    c. தொந்தரவு செய்தவாறு நடந்து கொண்டு எப்போதும் தண்டனைக்கு உள்ளாகும் பிள்ளைகள்
    d. மன ரீதியான கோளாறுகளுக்கு உள்ளான பிள்ளைகள்

23. முன் பள்ளி ஆசிரியர் ஒருவரின் பொறுப்பாக அமைவது,
    a. பிள்ளைக்கு நல்ல விதத்தில் வாசிக்க, எழுதக் கற்பிப்பது
    b. பிள்ளையின் திறமைகளையும் பலவீனங்களையும் இனங்கண்டு உரியவாறு வழிகாட்டுவது
    c. கணித்தலுக்கும் எழுத்தை இனங் காண்பதற்கும் உதவுதல்
    d. பெற்றாரின் தேவைகளுக்குச் செவி மடுத்தலும் அவற்றை நிறைவேற்ற ஆவன செய்தலும்

24. முன்பள்ளிப் பிள்ளைகளின் உடல் ரீதியான வளர்ச்சியில் தாக்கஞ் செலுத்தும் முக்கிய காரணிகள்
    a. அன்பு, சுற்றாடல், போசாக்கு, ஆரோக்கியம்
    b. அன்பு, சுற்றாடல், பாதுகாப்பு போசாக்கு
    c. போசாக்கு, சுற்றாடல், ஆரோக்கியம், உடற்பயிற்சி
    d. காப்பு, ஆரோக்கியம், பயிற்சி, சுற்றாடல்

25. குறைவான உடல் சார்ந்த மனவெழுச்சி என்ப்படுவது
    a. சண்டித்தனம்
    b. பிடிவாதம்
    c. அழுகை
    d. முன்வராமை

26. பிள்ளைகளின் கண்களில் betote மரு ஏற்படக் காரணம் பின்வருவனவற்றுள் எவ்வகையான குறைபாட்டினால் ஏற்படுகிறது
    a. விட்டமின் A
    b. விட்டமின் B
    c. விட்டமின் C
    d. விட்டமின் D

27. குவாஷியோகர் (kwashiorkor) நிலைமை ஏற்பட பின்வருவனவற்றுள் எதன் போசாக்குக் குறைபாட்டினால் ஏற்படுகிறது
    a. காபோவைதரேற்று
    b. புரதம்
    c. கொழுப்பு
    d. கனிய உப்பு

28. “மறைவான பசி” ஏற்படுவது பின்வருவனவற்றுள் எதன் குறைபாட்டினால் ஏற்படுகிறது
   a. விட்டமின் குறைபாட்டினால்
   b. கனிய உப்பின் குறைபாட்டினால்
   c. கார்போவைதேற்றின் குறைபாட்டினால்
   d. கொழுப்பின் குறைபாட்டினால்

29. ஜீன் பியாஜே குறிப்பிடும் அடிப்படைப் பருவங்கள் நான்கையும் முறையாகக் குறிப்பிடுவதாயின்
   a. முற் செயற்பாட்டுப் பருவம், புலன் இயக்கப் பருவம், முறையான செயற்பாட்டுப் பருவம், ஒன்றிணைந்த செயற்பாட்டுப் பருவம்
   b. ஒன்றிணைந்த செயற்பாட்டுப் பருவம், புலன் இயக்கப் பருவம், முற் செயற்பாட்டுப் பருவம், முறையான செயற்பாட்டுப் பருவம்
   c. புலன் இயக்கப் பருவம், முற் செயற்பாட்டுப் பருவம், ஒன்றிணைந்த செயற்பாட்டுப் பருவம் முறையான செயற்பாட்டுப் பருவம்,
   d. முற் செயற்பாட்டுப் பருவம், ஒன்றிணைந்த செயற்பாட்டுப் பருவம், புலன் இயக்கப் பருவம், முறையான செயற்பாட்டுப் பருவம்,

30. மாரியா மொண்டிஸோரி முறையில் தொடுகை பிரித்தறிகையை இனங்காண பயன்படுத்தப்படுவது பின்வருவனவற்றுள் எது?
   a. றோசாப்பு கோபுரம்
   b. துண்டுகள் புதிர்
   c. மணற் கடதாசி எழுத்து
   d. திரைச் சீலைச் சட்டகம்

(1 x 30 புள்ளிகள்)

## பகுதி 2

**முதலாம் வினா உள்ளடங்கலாக ஆறு வினாக்களுக்கு விடையளிக்கவும்**

1. 4 - 5 வயதுத் தொகுதியில் உள்ள பிள்ளைகளுக்கு காற்று தொடர்பாக 5 நாட்களுக்கு கற்பிப்பதற்காக 5 பாடக் குறிப்புக்களைத் தயாரிக்கவும் ? (5 x 3 = 15 புள்ளிகள்)

2.
   i) முன் பள்ளிக் கல்வியில் கற்றற் சூழல் ஏன் முக்கியமாக கொள்ளப்படுகிறது? (3 புள்ளிகள்)

   ii) முன் பள்ளிக் கல்வியில் கற்றற் சூழலின் முக்கியத்துவம் தொடர்பு பற்றி கவனஞ் செலுத் -தும் கல்வியலாளர்கள் / உளவியலாளர்கள் இருவரைக் குறிப்பிடவும் (2 புள்ளிகள்)

   iii) அவ்வாறான கருத்துக்களுள் இரண்டைச் சுருக்கமாக விளக்கவும். (6 புள்ளிகள்)

3.
   i) ஜீன் பியாஜேக்கு அமைய எண்ணக்கருவி விருத்தியின் மூன்று பருவங்கள் யாவை ? (3 புள்ளிகள்)

   ii) 3 - 4 வயதுத் தொகுதியில் உள்ள பிள்ளைகளுக்கு மேற் குறித்த பருவங்களில் வடிவங் களைக் கற்பிப்பதற்காக ஏற்ற செயற்பாட்டுத் தொகுதியொன்றைத் தயாரிக்கும் விதத்தை விபரிக்கவும். (8 புள்ளிகள்)

4.
   i) ஊட்டச் சத்தின்மை (malnutrition) எனப்படுவது யாது ? (2 புள்ளிகள்)

   ii) உங்கள் வகுப்பில் ஊட்டச் சத்துக் குறைபாடு உள்ள பிள்ளைகள் இருப்பின் அவர்களை இனங்காண்பது எவ்வாறு ? (3 புள்ளிகள்)

   iii) முன் பள்ளிப் பிள்ளைகளிடையே ஊட்டச் சத்து இன்மையை இல்லாமற் செய்வதற்காக முன் பள்ளி ஆசிரியர் என்ற வகையில் நீங்கள் எடுக்கக் கூடிய நடவடிக்கைகள் மூன்றைக் குறிப்பிடவும். (6 புள்ளிகள்)

5.
   i) முன் பள்ளிப் பிள்ளைகளின் **சுற்றாடற் சுத்தம்** எனப்படுவதனால் கருதப்படுவது யாது (3 புள்ளிகள்)

   ii) இது முன் பள்ளிப் பிள்ளைகளுக்கு எவ்வாறு முக்கியத்துவமாக அமைகிறது (3 புள்ளிகள்)

   iii) இதனைப் பிள்ளைகளுள் ஏற்படுத்தும் போது முக்கியத்துவமாக அமையும் என நீங்கள் கருதும் முக்கியமான விடயங்கள் யாவை ? (5 புள்ளிகள்)

6.

i) மனவெழுச்சி என்பதனால் கருதப்படுவது யாது ? (2 புள்ளிகள்)

ii) உடன்பாடான மனவெழுச்சியையும் எதிர் மறையான மனவெழுச்சியையும் வெவ்வேறாகத் தெரிவிக்கவும் (4 புள்ளிகள்)

iii) முன் பள்ளி ஆசிரியர் ஒருவருக்குப் பிள்ளைகளின் மனவெழுச்சியை ஏன் அமைத்துக் கொள்ளவேண்டும். (5 புள்ளிகள்)

7.

i) சிறுவர் கற்கை முறைகள் 4 ஐக் குறிப்பிடவும் (4 புள்ளிகள்)

ii) அவற்றுள் ஒரு முறையைத் தெரிவு செய்து உங்கள் வகுப்பில் பிள்ளையொன்றை கற்கைக்காகப் பயன்படுத்தக் கூடிய விதத்தை விபரிக்கவும்

(7 புள்ளிகள்)